செ.வெ.எண்.52 நாள்: 20.09.2017

# அனுமதி பெறாத கட்டிடங்களை வரன்முறைப்படுத்த வாய்ப்பு

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவிப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில் அனுமதி பெறாத கட்டிடங்களை வரன்முறைப்படுத்த இணைய தளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.110 மற்றும் 111 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD-4-2), நாள்.22.06.2017-ல் அனுமதியின்றி அல்லது அனுமதிக்கு மாறுபட்டு கடந்த 01.07.2007 அன்றோ அல்லது அதற்கு முன்போ கட்டப்பட்ட கட்டிடங்களை, கட்டிட உரிமையாளர்கள் தாமாக முன்வந்து வரன்முறைப்படுத்தி, அரசின் அமலாக்க நடவடிக்கைகளை தவிர்த்து கொள்ளலாம்.

திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட திருநெல்வேலி உள்ளூர் திட்டப் பகுதி மற்றும் பிற பகுதிகளில் அனுமதியின்றி அல்லது அனுமதிக்கு மாறுபட்டு அமைந்துள்ள கட்டிடங்களின் உரிமையாளர்கள், கட்டிடங்களை வரன்முறைப்படுத்த விண்ணப்பிக்கலாம்.

இதற்கு www.tnbuildingreg.in என்ற இணையதளத்தில் 21.12.2017-க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

இணையதள விண்ணப்பங்கள், பதிவு செய்துள்ள கட்டிடக்கலை வல்லுநர், உரிமம் பெற்ற அளவையர், கட்டிட பொறியாளரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். வரன்முறை கட்டணம் மற்றும் கூராய்வு கட்டணங்களை ஒரே தவணையில் இணையதளம் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பத்துடன் பத்திர நகல் மற்றும் ஆவணங்களின் நகல்களை பதிவு செய்து இணையதளம் மூலம் உரிய அலுவலர்களுக்கு சமர்ப்பித்து விண்ணபம் சேர்ந்ததற்கான ரசீதை இணையதளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

4 ஆயிரம் சதுர அடிக்கு உட்பட்ட குடியிருப்புகள், 2 ஆயிரம் சதுர அடிக்கு உட்பட்ட வணிக கட்டிடங்களை வரன்முறைப்படுத்தும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாநகராட்சி /நகராட்சி ஆணையர், செயல் அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு உள்ளது.

சிறப்பு கட்டிடம், தொகுப்பு கட்டிடம், பொது உபயோக கட்டிடம் மற்றும் தொழிற்சாலை கட்டிடங்களுக்கு திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலருக்கும் மற்றும் திருநெல்வேலி மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநருக்கும் பல அடுக்குமாடி கட்டிடங்களுக்கு நகர் ஊரமைப்பு ஆணையருக்கும், கட்டிடங்களை வரன்முறைப்படுத்தும் அதிகாரம் உள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி**